LIBRARY
5 - JUL 1954
LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Tuesday, 30th March 1954.

The House met in the Assembly Chamber, Government Estate, Mount Road, at ten of the clock, Mr. Speaker (THE HON. SRI J. SIVASHANMUGAM PILLAI) in the Chair.

I.—BUSINESS OF THE HOUSE—HOURS OF SITTING.

MR. SPEAKER :—" I wish to make an announcement. To-morrow we will not have a sitting. From day after to-morrow onwards, since the weather is getting hotter, the House will sit from 9 to 12 in the forenoon and 3 to 5 in the afternoon."

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Arrest of mill workers at Rajapalayam.

* 551 *Q.*—SRI M. KALYANASUNDRAM :—" Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that a large number of mill workers in the different mills at Rajapalayam have been arrested ; and

(*b*) if so, the reasons therefor ?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) & (*b*) Seventy-five workers (including two women) of Jayaram Mills, Rajapalayam, were arrested for disorderly behavior under section 75 of the Madras City Police Act, 1888, up to 10th March 1954. Forty-two workers of the Surgical Cotton Mills, Rajapalayam, were arrested for wrongful confinement of Electrical staff of the mills on 24th March 1954. No further arrests have so far been reported."

SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, நான் இங்கே ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்தவுடன் போலீஸார் ஜெயராம் மில்லில் கைதி செய்யப்பட்டவர்களை விடுதலை செய்துவிட்டார்கள். அதிலிருந்து அவர்களை போலீஸார் நியாயமான முறையில் கைதி செய்யவில்லை என்பதும், அனாவசியமாகக் கைதி செய்ததால் தான் விடுதலை செய்துவிட்டார்கள் என்பதும் தெரியவருகிறது. அதைப்போலவே ராஜபாளையத்திலுள்ள சர்ஜிகல் காட்டன் மில்லிலுள்ள 42 தொழிலாளிகளை போலீசார் கைதி செய்திருக்கிறார்கள். கைதி செய்யப்பட்டிருக்கும் தொழிலாளிகள் மில்லுக்குச் செல்லும் மற்ற சிப்பந்திகளைத் தடுத்தார்கள் என்பதோ, இடையூறு செய்தார்கள் என்று சொல்வதோ சரியல்ல. தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித்தரவேண்டுமென்பதற்காக, அந்த மில் வாசலில் வேலை நேரம் போக மற்ற நேரத்தில் சத்தியாக்கிரஹம் செய்து வந்த தொழிலாளர்களை, அந்த மில்களின் சொந்தக்காரர் பிரபல காங்கிரஸ்காரர் என்பதினால் போலீசார் கைதி செய்திருக்கிறார்கள். செக்ஷன் 151, I.P.C.-ஐ பிரயோகித்திருப்பதாக அறிகிறேன். இது முறையல்ல. ஆகவே போலீஸ்காரர்கள் செய்தது அக்கிரமம். கைதிசெய்யப்பட்ட சர்ஜிகல் காட்டன் மில் தொழிலாளர்களையும் உடனே விடுதலைசெய்வார்களா என்று நான் கேட்கிறேன் ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, after all the hon. Deputy Leader of the Opposition has got some information from some body. I have got here the official report

[30th March 1954

and I have given to the House the official version. It is open to enquiry later on and it will be found then who is in the wrong and who is not. Whatever it is, the Police have acted fairly. Afterwards, there was no disturbance and that is why they have been released, as far as the Jayaram Mills are concerned.''

Sri M. KALYANASUNDRAM :—" ஐயா, சர்ஜிகல் காட்டன் மில் தொழிலாளர்களைக் கைதி செய்துவிட்டதால்மட்டும் இப்பிரச்னை தீர்ந்துவிடாது. ' அவர்கள் கோரிக்கை என்ன ? அவர்கள் எதற்காக சத்தியாகிரஹம் செய்தார்கள் ? ' என்பதையெல்லாம் சர்க்கார் ஆராய்ந்து அவைகளை நிறை வேற்றுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா ? "

The Hon. Sri C. SUBRAMANIAM :—" Exactly, I do not have that information. I know the problem will not be solved by arresting a few persons. There are other things that have to be gone into and my Hon. Colleague in charge of Labour will look into the matter."

Sri K. P. GOPALAN :—" Is it the policy of the Government to arrest whenever they put up demands and whenever they resort to peaceful Satyagraha and strike. May I know whether it is the policy also of the Government to arrest mill-owners who deliberately violate the existing labour Acts of this Government? "

The Hon. Sri C. SUBRAMANIAM :—" This is with reference to the breach of the peace and whenever there is disorderly behaviour, the Police have to keep law and order and they do not discriminate between labourers and the employers as such. But unfortunately labourers indulge in various activities and other people get interested in it. That is the whole difficulty."

Sri R. KRISHNASWMY NAIDU :—" ராஜபாளையம் மில் சர்ஜிகல் காட்டன் மில்களின் சொந்தக்காரர் ஒரு பிரபல காங்கிரஸ்காரரோ அல்லது சாதாரண காங்கிஸ்காரரோ அல்ல என்பதை நான் கனம் மந்திரி அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

The Hon. Sri C. SUBRAMANIAM :—" I am very glad about the information. But of course, it is open to the Opposition always to impute motives that we are acting on behalf of Congressmen, etc."

Sri M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, அதன் சொந்தக்காரர் ராஜபாளையத்திலுள்ள ஐந்து மில்களின் சொந்தக் காரர். இப்பொழுது ஒரிஸா ராஜ்ய கவர்னராக இருக்கும் ஸ்ரீ குமாரசாமி ராஜா அவர்களுக்கும் இதில் சம்பந்தம் இருக்கிறது. அதை நான் மாத்திரம் சொல்லவில்லை. ஆனால் அக் குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீ டி. கே. ராஜா அவர் களே எடுத்துச் சொல்கிறார். அவரும் இது முக்கியமான பிரச்னை, ஆகவே இதைப் ற்றி விசாரிக்கவேண்டும் என்கிறார். அதோடு நம் ராஜ்யம் பூராவுமே இந்த மில்கள் கனம் குமாரசாமி ராஜாவின் குடும்பத்தினரைச் சேர்ந்ததால்தான் போலீஸார்கள் தொழிலாளர்களுக்கு விரோதமாக நடந்து கொள்ளுகிறார்கள் என்ற அபிப்பிராயம் பரவி இருக்கிறது. ஆகையால் இது சம்பந்தமான பூரா விபரத்தையும் அறிந்துகொள்ளவும், நடந்திருக்கும் விவரங்களையெல்லாம் நாங்கள் மந்திரி சபையினருக்கு எடுத்துச் சொல்லவும் இதைப்பற்றி அரை மணி நேரம் விவாதிக்க கனம் சபாநாயகர் அவர்கள் அனுமதி தரவேண்டுமென்று நான கேட்டுக்கொள்ளுகிறேன்."

30th March 1954]

MR. SPEAKER :—" We shall have it on the 1st April."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" It would be more convenient. We can have it on the 1st April."

Stationing of Police at Valluvakudi in Sirkali taluk.

* 552 *Q.*—SRI S. RAMALINGAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any special armed police is stationed at or near Valluvakkudi in Sirkali taluk of Tanjore district ; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) Yes, Sir.

' (*b*) It was felt necessary to do that to create a sense of security in that area."

SRI S. RAMALINGAM :—" கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது அங்குள்ளவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காகத்தான் **Special Armed Police** அங்கு கொண்டுபோய் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் அங்குள்ள விவசாயிகளுக்குப் பார்துகாப்பு அளிப்பதற்காக கொண்டுபோய் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்களா ? அல்லது அங்குள்ள மிராசுதார்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகக் கொண்டுபோய் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறார்களா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" For the general public, Sir, which includes both agriculturists and landlords."

SRI R. KRISHNAN :—" இந்த மாதிரியாக போலீஸ் படையைக் கொண்டுபோய் நிறுத்தி வைப்பதற்கு அங்குள்ள ஜமீன்தார்களும், விவசாயிகளும் ஏதாவது தங்களுக்குள் குழப்பம் செய்துகொண்டார்களா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, some disturbances were expected and in order to prevent any such happening, we have posted the Police there."

SRI C. MUTHIAH PILLAI :—" வள்ளுவக்குடியில் கம்யூனிஸ்ட் கட்சி 10–10
சர்க்காருக்கு எதிராகவே ஒரு போட்டி சர்க்கார் நடத்துவது அரசாங்கத்திற்குத் a.m.
தெரியுமா ? 10 மைலுக்கு அப்பால் போலீஸ் ஸ்டேஷன் இருப்பதால் அங்குள்ள மக்களின் பந்தோபஸ்துக்கே ஆபத்து ஏற்பட்டிருப்பதால் அங்கே ஒரு போலீஸ் ஸ்டேஷன் ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" With reference to the allegations about the activities of the Communist Party there, all that has been taken into consideration and I do not think there is any immediate fear of any breach of the peace."

SRI M. KALYANASUNDRAM :—" ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு போலீஸ் ஸ்டேஷனை ஏற்படுத்திக்கொண்டுதான் ராஜ்யத்தை ஆளவேண்டுமென்ற வெட்ககரமான நிலைமைக்கு சர்க்கார் வந்துவிட்டால் நான் அதைப் பற்றி கவலைப்படவில்லை. தாராளமாக போலீஸ் ஸ்டேஷனை வைத்துக்கொள்ளட்டும். ஆனால் இந்த வள்ளுவக்குடியிலுள்ள விவசாயிகள் அந்தப் பிரதேசத்தில் அமைதிக்கு குந்தகமான முறையில் எந்தவித நடவடிக்கையும்த் எடுத்திருப்பதாக சர்க்காரால் சொல்ல முடியாது. அதற்கான புள்ளி விவரங்களையும் கொடுக்க முடியாது. அப்படியிருக்கும்போது அங்கே எஸ்.ஏ.பி.-க்களை அனுப்பி விவசாயிகளை பயமுறுத்துவதும், இம்சிப்பதும் எதற்காக ? மேலும்